Updated

# QB365 Question Bank Software Study Material

## நாட்டு வருமானம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) நாட்டு வருமானம் இலக்கணம் கூறுக.

**பதில் :** "ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், நாட்டு வருமானம் அல்லது நாட்டு ஈவுத் தொகை ஆகும்." என்று ஆல்ஃபிரட் மார்ஷல் கூறுகிறார்.

2) GNP கணக்கிடும் வாய்பாட்டை எழுதுக.

**பதில் :** அங்காடி விலையில் GNP என்பது C+I+G+ (X-M) + (R-P)
அங்காடி விலையில் GNP =அங்காடி விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.

3) NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?

**பதில் :**

| NNP நிகர நாட்டு உற்பத்தி | NDP நிகர உள்நாட்டு உற்பத்தி |
|---|---|
| நிகர நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். | நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். |
| NNP = GNP - தேய்மான கழிவு | நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP - தேய்மானம். |

4) GNP க்கும் NNPக்கும் உள்ள தொடர்பினை எழுது

**பதில் :** GNP:
1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட வினை முடிவடைந்த பண்டங்கள். பணிகளின் அங்காடி மதிப்பில் கணக்கிடப்படுவது ஆகும்.
2. இதில் நிகர வெளிநாட்டு வருமானமும் (நிகர ஏற்றுமதி சேர்க்கப்படும்.
NDP:
1. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும்.
2. தேய்மானத்தின் மதிப்பை GDP யிலிருந்து கழித்து விட்டால் கிடைப்பது NDP ஆகும்.

5) தனிமனிதர் வருமானம் என்றால் என்ன?

**பதில் :** தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆகும். அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அனைத்தையும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் கூட்டினால் அது தனிமனிதர் வருமானம் ஆகும்.

6) GDP குறைப்பான் இலக்கணம் தருக

**பதில் :** GDP குறைப்பான் என்பது GDP யில் காணப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் விலைமாற்ற குறியீட்டெண் ஆகும்.

GDP குறைப்பான் = பணமதிப்பு GDP x100

உண்மை மதிப்பு GDP

7) நாட்டு வருமானம் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது.

**பதில் : சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

1. உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். அங்காடியில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.
2. உற்பத்தி முறையில் நாட்டு வருமானம் கணக்கிடுதல் என்பது நடப்பு அங்காடி விலையில் வினை முடிவடைந்த பண்டங்களின், பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும்.
3. பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணைப் பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை நாட்டு வருமானத்தை கணக்கிடுகின்றனர்.

8) தேசிய வருவாய் என்றால் என்ன?

**பதில் :** தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டு ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும்.

9) தேசிய வருவாயை கணக்கிடும் மூன்று முறைகள் யாவை?

**பதில் :** (i) ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை கணக்கிட்டு, அதனை பணமதிப்பில் மதிப்பிடப்படவேண்டும்.

(ii) அதாவது நமது சுய நுகர்வுக்காகவோ அல்லது சேமிப்பிற்காகவோ பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதன் பண மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்க வேண்டும்.

(iii) ஆகவே தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடுகிறோம்.

10) PQLI என்பதன் விரிவாக்கம் மற்றும் உட்கூறுகள் யாவை?

**பதில் :** PQLI என்பது பொருளாதார நலனை கணக்கிடுவத்தில் முக்கிய குறியீட்டெண்ணாக உள்ளது. மக்களின் வாழ்க்கை தரம், வாழும் காலம் மற்றும் கல்வியறிவு போன்றவை PQLI(Physical Quality of life Index) உள்ளடங்கி இருக்கிறது.

**<u>3 மதிப்பெண் வினாக்கள்</u>** 10 x 3 = 30

11) தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. தலைவீத வருமானம் என்பது ஓர்ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

2. தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நாட்டு வருமானம்}}{\text{அதே ஆண்டின் மக்கள் தொகை}}$$

12) தனிமனிதர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

**பதில் :**

| தனிமனிதர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| 1. தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிமனிதர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| 2. வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அனைத்தையும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் கூட்டினால் அது தனிமனிதர் வருமானம் ஆகும். | இந்த வருமானம் தான் தனிமனிதர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும். |
| 3. சூத்திரம்: தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் - (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) மாற்று செலுத்துதல்கள். | சூத்திரம் : செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் நேர்முக வரிகள். |

13) காரணி செலவில் NNP - குறிப்பு தருக.

**பதில் :** 1. நிகர நாட்டு உற்பத்தி என்பது உற்பத்தியின் அங்காடி மதிப்பு ஆகும்.
2. காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.
3. காரணி செலவில் நிகர நாட்டு வருமானத்தை பெறுவதற்கு, அங்காடி விலையில் NNP யின் பணமதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழிக்க வேண்டும். மேலும் மானியங்களைக் கூட்ட வேண்டும்.
4. காரணிசெலவில் NNP = சந்தை விலையில் NNP - மறைமுகவரி மானியம்.

14) செலவுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.

**பதில் :** செலவுமுறை என்பது நாட்டின் மேற்சொன்னப்படும் அனைத்து செலவுகளின் கூட்டுத்தொகை ஆகும். ஓர் ஆண்டு காலத்தில் சமுதாயத்தில் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. இதில் தனிநபர் செலவு, நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருட்கள் வாங்குவதற்கான செலவு மற்றும் நிகர ஏற்றுமதி செலவு இவை அனைத்தையும் கூட்டினால் கிடைக்கும் மொத்த செலவு தேசிய வருவாயாக கணக்கிடப்படுகிறது.

**GNP = C+I+G+(X-M)**

**C** = தனியார் நுகர்வு செலவு

**I** = தனியார் முதலீட்டு செலவு

**G =** அரசின் கொள்முதல் செலவு

**(X-M)** = நிகர ஏற்றுமதி இறக்குமதி

15) நாட்டு வருமானம் கணக்கிடுதலில் " இருமுறை கணக்கீட்டுச் சிக்கலுக்கு என்ன தீர்வு?

**பதில் :** 1. ஒரே பண்டம் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது.
2. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பண்டம் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.
3. சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பண்டங்களின் மதிப்பையும் நாட்டு வருமானம் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
4. இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த பொருள்களை வாங்குதல், விற்றல் நடவடிக்கைகளின் பணமதிப்பை நாட்டு வருமானத்தில் சேர்க்கக் கூடாது.

16) நாட்டு வருமானம், பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**பதில் : நாட்டு வருமானமும் பொது நலனும்:**

1. ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் நாட்டு வருமானத்தைப் அ பொறுத்தே அமைகிறது.
2. GDP யில் தலைவீத வருமானம். அதன் ஆண்டு 35 வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது.
3. அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

**பொது நலன் :**

1. நுகர்வுப் பண்டங்களைக் காட்டிலும் மூலதனப் பண்டங்கள் அதிகமாக இருந்தால், பொருளாதார நலனின் முன்னேற்றம் குறைவாக இருக்கும்.
2. இயற்கை வளங்களான காற்று, நீர், மண் ஆகியவற்றை மாசுபடுத்தி அதிகமான GDPயை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.
3. இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் நாட்டு உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.
4. பெண்களுக்கு வேலைவாய்ப்பைத் தருதல், உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் முதலானவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம்.

17) நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின் பயன்களைப் பட்டியலிடுக.

**பதில் :** நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின் பயன்கள் :

1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறன் அல்லது உற்பத்தி செயல்திறனை நாட்டு வருமானம் விளக்குகிறது. பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடுபவர்கள், அரசு, வணிகர்கள், IMF, உலகவங்கி முதலான பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரத்தைப் பயன்படுத்துகின்றன.
2. நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்தப் புள்ளி விவரங்களைப் பகுத்தாய்வு செய்கின்றன.
3. மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதா என்பதைக் கண்டறிய நாட்டு வருமானம் உதவுகிறது.
4. மேலும் பிற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரம் பயன்படுகிறது.
5. ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவைக் கணக்கிட நாட்டு வருமானம் பயன்படுத்தப்படுகின்றது.

18) மொத்த தேசிய உற்பத்தி எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

**பதில் :** மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டின் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முழுமையான பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பு தேசிய உற்பத்தியாகும். இதனுடன் நிகர ஏற்றுமதியின் மதிப்பும் சேர்க்கப்படும்.

GNP = C+I+G+(X-M)+(R-P)

C - நுகர்வு பொருட்கள்

I - உற்பத்தி பொருட்களின் முதலீடு

G - அரசாங்கம் வாங்கும் பண்டம் மற்றும் பணிகள்

(X-M) - ஏற்றுமதி இறக்குமதி வேறுபாடு

(R-P) - காரணி வருவாய் வேறுபாடு

19) புள்ளி விபர சிக்கல் எப்போது ஏற்படும்?

**பதில் :** புள்ளி விபரம் என்பது பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் கண்ணாடி போன்றது. இதனை சேகரிப்பதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன. நாட்டின் வளர்ச்சி நிலையை அறிய புள்ளி விபரம் அவசியமான ஒன்று.

பிரச்சனைகள்:

1. நம்பகத் தன்மையின்மை
2. சேகரிப்பவரின் திறமை குறைவு
3. அர்ப்பணிப்பு இன்மை

போன்றவை புள்ளி விபரம் சேகரிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் ஆகும்.

20) செலவு முறை கணக்கீட்டின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

**பதில் : 1. ஏற்கனவே வாங்கிய பொருளை மீண்டும் வாங்குதல்:**
ஏற்கனவே வாங்கப்பட்ட கார், இருசக்கர வாகனம், கைபேசி, இயந்திரம் போன்ற பொருள்களை இரண்டாம் முறை வாங்கும்போது ஏற்படும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக்கூடாது.
**2. பங்கு மற்றும் பத்திரங்கள் வாங்குதல்:**
பழைய பங்கு பத்திரங்களை இரண்டாம் நிலை அங்காடிகளில் வாங்கும்போது ஏற்படும் செலவுகள் சேர்க்கக்கூடாது.
**3. மாற்று செலுத்து நிலை:**
அரசாங்கம் செய்யும் மாற்றுச் செலுத்துதல்களான முதியோர் ஓய்வூதியம் சேர்க்கக்கூடாது.
**4. இடைநிலை பொருட்களுக்கு செய்யும் செலவு:**
விவசாயிகள் விதை மற்றும் உரம் வாங்க செய்யும் செலவு, தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருட்கள் போன்றவை சேர்க்கப்படக்கூடாது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

21) நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி.

**பதில் :** நாட்டு வருமானத்தின் முக்கியத்துவம் :
1. நாட்டு வருமானம் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் நாட்டு வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
2. நாட்டளவிலான பணவியல் கொள்கைகள், பொது நிதிக் கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவும் கடைப்பிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் நாட்டு வருமானம் ஆய்வு உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை நாட்டு வருமானம் கணக்கீடு அளிக்கின்றது.
4. குறுகிய கால, நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க நாட்டு வருமானம் கணக்கீடு பயன்படுகிறது.
5. துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், நாட்டு வருமானம் விவரங்கள் பயன்படுகின்றன.
6. நாட்டு வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது.
7. ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளுக்கான வருமானப் பகிர்வை தெரிந்துகொள்ள நாட்டு வருமானம் பயன்படுகிறது.
8. பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி - GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை - GDP விகிதம், கடன் - GDP விகிதம் ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது.

22) நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக

**பதில் :** நாட்டு வருமானத்தை மூன்று முறைகளைப் பயன்படுத்தி அளவிடலாம். அவை,
1. உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் முறை.
2. வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும் செலவு முறை.
**உற்பத்தி முறை :**
1. உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியைக் கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.
2. ஒரு துறையின் வெளியிடு பொருள் மற்றொரு துறையின் உள்ளிடுபொருளாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது.
3. இதற்கு இருமுறைக் கணக்கிடல் எனப் பெயர். இதனைத் தவிர்க்க வினை முடிந்தப் பண்டங்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
**வருமான முறை :**
1. வருமான முறை என்பது நாட்டு வருமான கணக்கிடலைப் பகிர்வு பகுதியிலிருந்து அணுகுகிறது.
2. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங் களையும் கூட்டி நாட்டு வருமானத்தைக் கணக்கிடலாம்.
3. வருமான முறையானது, காரணிகள் ஈட்டும் வருமான முறை எனவும் அழைக்கப்படுகிறது.
**செலவு முறை:**
1. இம்முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
2. தனிமனிதரின் சொந்த நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டுப் பொருள் வாங்கும் செலவு, நிகர ஏற்றுமதி முதலான அனைத்துச் செலவுகளையும் கூட்டி செலவு முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
GNP = C+I+G+(X-M)

23) நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை?

**பதில் :** நாட்டு வருமானம் கணக்கீடு செய்யும் போது இந்தியாவின் சிறப்பு இயல்புகளை மனதில் கொள்ள வேண்டும். சில சிக்கல்கள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**சிக்கல்கள் :**

**மாற்றுச் செலுத்துதல்கள் :**

1. ஓய்வூதியம், உதவித்தொகை, வேலையின்மைக்கான மானியங்கள் முதலானவற்றை அரசு அளிக்கிறது.
2. இவை அரசின் செலவுகள் ஆகும். ஆனால் இவற்றை நாட்டு வருவாயில் சேர்ப்பதில்லை.

**தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடு வதில் சிக்கல் :**

1. தேய்மானம் இழப்பீடு, கொடுப்பளவு. விபத்து, பழுதுக் கட்டணங்கள் முதலானவற்றை நாட்டு வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல.
2. இவைகளை அதிக கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**பணம் செலுத்தப்படாத சேவைகள்:**

1. இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர்.

உணவு தயாரித்தல், தையல், பழுது பார்த்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலான வேலைகளையும் எவ்வித பண வருமானமும் இன்றியும், நட்பு, பாசம்,
அன்பு, மரியாதை ஆகிய பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள்.

2. ஆனால் அவர்களுடைய நாட்டின் படுவதில்லை. உற்பத்தியில் அர்ப்பணிப்பு சேர்க்கப்படுவதில்லை

**சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் :**

1. சூதாட்டம், கடத்தல், சட்ட விரோதமாக மது தயாரித்தல் முதலிய சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் நாட்டு வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை.
2. இந்த நடவடிக்கைகள் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்தாலும் சமுதாய ரீதியில் உற்பத்தியைச் சார்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

**சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

1. உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.
2. அங்காடியில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**மூலதன இலாபம் :**

மூலதன சொத்துக்களான வீடு, பிற சொத்துக்கள், பங்குகள் முதலானவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது.

**புள்ளி விவர சிக்கல் :**

1. புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன.
2. ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு,
3. அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை நாட்டு வருமானம் கணக்கிடுதலில் சிக்கல்களைத் தரலாம்.

24) பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி

**பதில் : சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள் :**

இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்படுகிறது. தனிமனிதர்கள்உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்த ஒரு குழு முதலானவற்றுக்கு இடையே நடைபெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களை ஒரு துறை என்கிறோம். ஒரு நாட்டின் பொருளாதாரம் கீழ்க்காணும் துறைகளாகப் பிரிக்கப்படுகிறது. நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு, வெளிநாட்டு வணிகம், மூலதனத் துறை.

**நிறுவனங்கள் :**

நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள், பணிகளை செய்கின்றன. உற்பத்தி

**குடும்பங்கள் :**

குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்து கூலியைப் பெற்று, அதன் மூலம் பண்டங்கள், பணிகளை வாங்குகின்றன. அதாவது ஊதியத்தினைப் பெற்று பண்டங்களை வாங்குகின்றது. நிறுவனங்கள் குடும்பங்களின் பணியைப் பெற்று கூலியைத் தருகின்றன.

**அரசு :**

அரசுத் துறையில் பல நிலைகள் உள்ளன. கிராமம், வட்டம், மாவட்டம், மாநிலம், மத்திய அரசு என பல நிலைகள் உள்ளன. எடி மற்றும் பீகாக் கூற்றுப்படி, அரசு என்பது "ஒன்று சேர்க்கப்பட்ட மனிதர்கள்" எனக் குறிப்பிடுகின்றனர். வரி, தண்டனை, கட்டணம் மற்றும் கடன் ஆகியவை மூலமாக அரசு நிதியைத் திரட்டி பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது.

**வெளிநாட்டு வணிகம் :**

ஏற்றுமதி, இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு மூலதன வருமானம், செலுத்துதல்கள் ஆகியவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகின்றன.

**மூலதனத்துறை :**

மூலதனத்துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பரிமாற்றங்கள் இதில் அடங்கும். GDPயில் துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரமானது முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் துறை எனப் பிரிக்கப்படுகிறது.

25) உற்பத்தி முறையில் நாட்டு வருவாய் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை விவரி?

**பதில் :** உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இதனை சரக்கு முறை என்பர். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில் வாணிபம் போன்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் தேசிய வருமானம் ஆகும். இதனை கணக்கீடு செய்யும்போது ஒரு துறையின் வெளியீடு வேறு துறை உற்பத்தியின் உள்ளீடாக அமைய வாய்ப்புள்ளது. இதனை கணக்கில் எடுக்காவிடில் இரண்டு முறை கணக்கில் சேர்ந்து வரும்.

**பண்ணை உற்பத்தியின் மதிப்பு கணக்கிடல்:**

1. 64 வகை விவசாய பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. இது ஒரு ஹெக்டேருக்கு சராசரி உற்பத்தியை கணக்கிட்டு பயிரிடப்பட்ட நிலப்பரப்பால் பெருக்கினால் உற்பத்தியின் அளவு கிடைக்கும்.
2. ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.
3. எல்லா பயிர்களின் மொத்த உற்பத்தியை எடுத்துக் கொண்டு விவசாயத்துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.
4. விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு மொத்த விவசாய உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடி கட்டணம் சரி செய்தல் தேய்மானம் போன்றவற்றை கழிக்க வேண்டும்.
5. மேலும் மற்ற துறைகளான கால்நடை, காடுகள், மீன் வளர்ப்பு, சுரங்க தொழில், தொழிற்சாலை போன்றவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் மொத்த மதிப்பு கணக்கிடப்படுகிறது.

இவை அனைத்தையும் ஒன்று கூட்டினால் நாட்டின் உற்பத்தி முறையில் தேசிய வருவாயை கணக்கிடலாம்.